

கோவை ஆவாரம்பாளையம் ரெட்ரோஸ் பேக்கரி அருகில், திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் நடைபெற்ற நீட் தேர்வை எதிர்த்து உயிர் நீத்த அனிதா நினைவேந்தல் நிகழ்ச்சியில் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக் திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு ,அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர். திராவிட இயக்கத் தமிழர் பேரவை கோவை மாவட்ட செயலாளர் கா.சு.நாகராஜ் கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் பொள்ளாச்சி உமாபதி, மாநகர் மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், பீளமேடு பகுதி 2 செயலாளர் மா.நாகராஜ், மாநகர் மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி அமைப்பாளர் நா.பாபு கோபிநாத்,கழக நிர்வாகிகள், திராவிட இயக்கத் தமிழர் பேரவை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ஆந்திரம், தெலங்கானா கனமழை:

## 20 ரயில்கள் ரத்து!

அமராவதி,செப்.2–

ஆந்திரம் மற்றும் தெலங்கானாவில் பெய்து வரும் தொடர் கனமழை காரணமாக 20 ரயிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

ஆந்திரம் மற்றும் தெலங்கானா மாநிலங்களில் தொடர் கனமழை பெய்து வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக விஜய்வாடாவுக்குட்பட்ட அம்பாபுரம், நைனாவரம், நுன்னா, பதப்பாடு ஆகிய பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. குடியிருப்பு பகுதிகளை வெள்ளம் சூழ்ந்ததால் அப்பகுதியில் இருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் காவல் துறை மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் குழுவினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே ஆந்திரம் மற்றும் தெலங்கானா மாநிலங்களில் பெய்து வரும் தொடர் கனமழையால் 20 ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

### புதுக்கோட்டை மாவட்டம் மேலத்தானியத்தில்

# தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் புதிய கிளைகள்!

### அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்!

புதுக்கோட்டை, செப். 3 -

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், 31 மேலத்தானியம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் புதிய கிளை ஒலியமங்கலத்திலும் மற்றும் திருமயம் ஊராட்சி ஒன்றியம், எம்.எம்.154 கோட்டூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் புதிய கிளை லெம்பலக்குடியிலும், சட்டம், நீதிம ன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, தலைமையில் (30.08.2024) அன்றுதிறந்து வைத்தார்.

பின்னர் அமைச்சர் எங். ரகுபதிதெரிவித்ததாவது;

முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் நலனுக்காக எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் கூட்டுறவுத் துறையின் சார்பில், வங்கிக் கடனுதவிகள் வழங்குதல், மகளிர் சுயஉதவி குழுவினர்களுக்கு கடனுதவிகள் வழங்குதல், நகை கடன் தள்ளுபடி உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி இன்றையதினம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் புதிய கிளை ஒலியமங்கலம் மற்றும் லெம்பலக்குடியில் திறந்து வைக்கப்பட்டது.

ஒலியமங்கலம் கிளை திறந்து வைக்கப்பட்டதன் மூலம், இப்பகுதியில் உள்ள காயம்பட்டி, வேங்கம்பட்டி, வெள்ளாளப்பட்டி, வெட்டுக்காடு, சுந்தம் பட்டி, சேர்வைக்காரன்பட்டி, சுரைக்காய்ப்பட்டி, எழுவங்கோரைப்பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன் பெறுவார்கள்.

லெம்பலக்குடி கிளை திறந்து வைக்கப்பட்டதன் மூலம், இப்பகுதியில் உள்ள குலமங்கலம், ராராபுரம், கும்மங்குடி, கோட்டூர், லெம்பலக்குடி, கடம்பவயல், மல்லாங்குடி, பிலாக்குடிப்பட்டி, பேரையூர், அரசந்தம்பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன் பெறுவார்கள்.

எனவே தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற நலத்திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு தங்களது பொருளாதாரத்தினை மேம்ப டுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் ஜீவா, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் தெய்வநாயகி, மத்திய கூட்டுறவு வங்கி செயலாட்சியர்/ இணைப் பதிவாளர் மு.தனலெட்சுமி, கூட்டுறவு சார்பதிவாளர்/செயலாட்சியர் ஆர்.சுப்பிரமணியன், அறந்தாங்கி சரக துணைப் பதிவாளர் ஆறுமுகப்பெருமாள், புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் மேலாளர் பா.பிரபாகரன், ஊராட்சிமன்றத் தலைவர்கள் சோலையம்மாள் சிவக்குமார் (ஒலியமங்கலம்), ஆர்.பாலு (லெம்பலக்குடி), ஒன்றியக்குழு உறுப்பினர் சிவரஞ்சனி வினோத்குமார், செயலாளர்கள் எம். சுப்பிரமணியன் (மேலத்தானியம்), ராஜேந்திரன் (லெம்பலக்குடி), அழகு. சிதம்பரம், இரா.கணேசன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில்

# ருத்ராவதி பேரூர் செயலாளர் செ.அன்பரசு திருமண வரவேற்பு விழா!

### கழக முன்னணியினர் பெருந்திரளாக பங்கேற்பு!

திருப்பூர், செப். 3 -

திருப்பூர் மாவட்டம், குண்டடம் வட்டம், ருத்ராவதி பேரூர் கழக செயலாளர், பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் செ.அன்பரசு திருமண வரவேற்பு விழா தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லசியுடன், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், மு.பெ.சாமிநாதன் தலைமையில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், உடுமலை நகர் மன்ற உறுப்பினர் மு. ஜெயக்குமார் வரவேற்புரையில் திருப்பூர் தெற்கு மாவட்டம், தாராபுரம் வட்டம், குண்டடம் கிராமம் சங்கிலியம்பாளையம் சு.செல்லமுத்து செ.பாலாமணி ஆகியோரின் புதல்வன் செ.அன்பரசு (ருத்ராவதி பேரூர் கழக செயலாளர், இளைஞர் அணி அமைப்பாளர்), காங்கேயம் வட்டம், இலக்குமநாயக்கன்பட்டி கிராமம், காட்டூர் நினைவில் வாழும் க.முத்துசாமி மு.நிர்மலா ஆகியோரின் புதல்வி மு.நி. மஞ்சு திருமண வரவேற்பு விழா நாளை ( 04.09.2024 புதன் கிழமை) மாலை 6.30 மணி முதல் இரவு 9.00 மணி வரை காடையூர், சம்பந்தம்பாளையம் பிரிவு, காங்கேயம் கோவை சாலையில் அமைந்துள்ள ஶ்ரீ சிவசக்தி மஹாலில் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ்விழாவில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர், திண்டுக் கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் அர.சக்கரபாணி, கழக மகளிர் அணி துணைச் செயலாளர், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், மடத்துக்குளம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.ஈஸ்வரசாமி, பொதுக்குழு உறுப்பினர், புங்கந்துறை ஊராட்சி முன்னாள் தலைவர் கே.எஸ்.கருணாகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக செயலாளர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பா ளர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக உடன் பிறப்புகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். இறுதியில் ஆட்சி மண்டல குழு உறுப்பினர், குண்டடம் lll PAP பாசன சபை சு.பொன்னுச்சாமி நன்றியுரையாற்றுகிறார்.

### கள்ளக் குறிச்சி வடக்கு மாவட்டத்தில்

# கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!



### மாவட்டச் செயலாளர் தா.உதயசூரியன் அறிவிப்பு!

| ஒன்றியம் /நகரம்/ பேரூர் | செயலாளர்கள் | தேதி | இடம் |
|---|---|---|---|
| திருவெண்ணெய்நல்லூர் கிழக்கு ஒன்றியம் | ம.சந்திரசேகரன் | 3-9-2024 காலை 10.00 மணி | கீர்த்தி மண்டபம் - அரகூர் |
| சங்கராபுரம் தெற்கு ஒன்றியம் | ந. ஆறுமுகம் | 3-9-2024 மதியம் 3.00 மணி | NSK மண்டபம், மேலேரி |
| திருநாவலூர் மேற்கு ஒன்றியம் | வெ.முருகன் | 4-9-2024 காலை 9.30 மணி | பூங்குழலி மண்டபம் களமருதூர் |
| திருநாவலூர் கிழக்கு ஒன்றியம் | ஜி.ஆர்.வசந்தவேலு | 4-9-2024 காலை 11.00 மணி | வசந்தம் மஹால் – கெடிலம் |
| கள்ளக்குறிச்சி வடக்கு ஒன்றியம் | எஸ்.பி. அரவிந்தன் | 4-9-2024 மதியம் 3.00 மணி | சுபம் மஹால் – வன்னஞ்சூர் |
| வடக்கனந்தல் பேரூர் | C.ஜெயவேல் | 4-9-2024 மாலை 4.30 மணி | VSA மண்டபம் – வடக்கனந்தல் |
| சின்னசேலம் பேரூர் | M.செந்தில்குமார் | 5-9-2024 மதியம் 3.00 மணி | அகமுடையர் மண்டபம் - சின்னசேலம் |
| உளுந்தூர்பேட்டை மேற்கு ஒன்றியம் | ப.இராஜவேல் | 7-9-2024 காலை 10.00 மணி | BSK திருமண மண்டபம் எலவனாசூர்கோட்டை |
| சங்கராபுரம் பேரூர் | தா.துரைதாகப்பிள்ளை | 8-9-2024 மாலை 4.00 மணி | தாகப்பிள்ளை திருமண மண்டபம் - சங்கராபுரம் |
| உளுந்தூர்பேட்டை கிழக்கு ஒன்றியம் | சிவ. வைத்தியநாதன் | 9-9-2024 காலை 10.00 மணி | லலிதா சக்கரவர்த்தி மண்டபம்- உளுந்தூர்பேட்டை |
| உளுந்தூர்பேட்டை நகரம் | த.டேனியல்ராஜ் | 9-9-2024 மதியம் 12.00 மணி | லலிதா சக்கரவர்த்தி மண்டபம்- உளுந்தூர்பேட்டை |
| சின்னசேலம் வடக்கு ஒன்றியம் | வி.வி. அன்புமணிமாறன் | 9-9-2024 மதியம் 2.00 மணி | கொங்கு மண்டபம் - சின்னசேலம் |
| கல்வராயன்மலை வடக்கு ஒன்றியம் | சு. கிருஷ்ணன் | 10-9-2024 காலை 9.00 மணி | வெங்கோடு ஊராட்சி |
| கல்வராயன்மலை தெற்கு ஒன்றியம் | ல.சின்னதம்பி | 10-9-2024 மதியம் 12.00 மணி | கரியாலூர் ஊராட்சி |

மேற்காணும் விபரப்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**தா.உதயசூரியன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட தி.மு.க.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் துளுவ வேளாளர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் டாக்டர் வே. செழியன் வரவேற்புரையாற்றினார். கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில் ஒன்றிய அளவிலான பொது உறுப்பினர்கள் கூட்டம் வேப்பனப் பள்ளி தெற்கு, வடக்கு, சூளகிரி வடக்கு ஒன்றியங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய செயலாளர்கள் ரகுநாத், கருணாகரன், நாகேஷ் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்ட செயலாளர், பிரகாஷ் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்த கூட்டங்களில் முருகன், சத்யா, சீனிவாசன், சுகுமாரன், அரியப்பன், சின்னசாமி, எல்லோரா மணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### ஆர்.டி.எஸ்.சரவணன் தலைமை!

# திருமருகல் தெற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் சிறப்புரை!

நாகை, செப். 3 –

நாகை மாவட்டம் திருமருகல் தெற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நரிமணம் ஜெ.கே.பி. திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திருமருகல் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஆர்.டிஎஸ்.சரவணன் தலைமை தாங்கினார். ஒன்றிய அவைத்தலைவர் எம்.ஜெகபர்அலி, துணைச் செயலாளர்கள் எம்.துரையரசன், டி.பாலையன், எஸ்.கலா, பொருளாளர் பி.கலியமூர்த்தி, மாவட்ட பிரதிநிதிகள் டி.சோமு, எம்.மகேந்திரன், ஜி.ரமேஷ்கண்ணா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் சிறப்புரை யாற்றினார். கூட்ட்ததில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆரூர்மணி வண்ணன், மாவட்டக் கழக முன்னாள் துணைச் செயலாளர் ஆர்.இளஞ்செழியன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என்.கார்த்திக், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் இளம்.சுந்தர், மாவட்ட அயலக அணி தலைவர் ஏ. சாதிக்ஜப்பார், மாவட்டசார்பு அணி நிர்வாகிகள் எஸ்.கார்த்திகேயன், ஏ.சுல்தான்ஆரிப், கே.கலைச்செல்வி, எஸ். சிவராமன், கே.சத்திவேல், எம்.ரீனாமுருகராஜ், எஸ்.இராமராஜன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# செயற்கை நுண்ணறிவு உலகையும் தமிழ் வெல்லட்டும்!

## ‘கணையாழி’ தலையங்கம்!

முத்தமிழ் அறிஞர் கலைஞர்
நூற்றாண்டு நினைவாக
நூறு ரூபாய் நாணயத்திலும்
‘தமிழ் வெல்லும்!’

ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள
நாணயத்தில் ‘தமிழ் வெல்லும்’
இடம் பெறச் செய்திருக்கிறார்
தமிழ்நாடு முதல்வர்!

சங்க காலம் முதலே
தமிழர்களுக்கு இருந்திருக்கிறது நாணயம்!

சங்க இலக்கியங்களிலும்
அணிகலனாகக் காசு!
நாள், மலர், காசு, பிறப்பு என்று
வெண்பாவின் இறுதிச் சீர் வரிசையிலும் காசு!
இப்போதும் பலர்
வீட்டுத் திருமணங்களின்
சீர் வரிசையில் காசு!

உலகில் தொன்மையான
முத்திரை நாணயம்
கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு உரியது.
அந்தக் கால நாணய வரலாற்றுக்குப்
பங்களிக்கும் இடங்களாகத்
தமிழ் நாட்டில் கீழடியும் கொடுமணலும்!.

பிறகு வந்த நாணயங்களில்
அரசனின் பெயரும் சின்னமும்!
விஜய நகர ஆட்சிக்கு முன்புவரை
நாணயத்தில்
கடவுள் இருந்ததாகத் தெரியவில்லை.

இப்போது நாடும் சின்னமும் எழுத்துமாக
உலகெங்கும் நாணயங்கள்!

நாணயங்களில் மொழி இருக்கும்
ஆனால்
நாணய வரலாற்றில் எங்கேயும்
இதுவரை தன் மொழி வெல்லும் என்ற
பிரகடனம் இடம்பெறவில்லை
சாதித்திருக்கிறார் தமிழ்நாடு முதல்வர்!

நாணயம் வெளியிடும் அதிகாரம்
மாநில அரசிடம் இல்லாத போதும்
தமிழ் வெல்லும் என்று
ஒன்றிய அரசையே
சொல்ல வைத்திருக்கிறார்!

தனிப்பட்டவர்களின்
சொல்லில் அடைபட்டுக் கிடந்த அறிவு
அவருக்குப் பின்பும் பயன்பட
எழுத்தில் தன் ஆயுட் காலத்தை
ஏற்றிக் கொண்டது.

அச்சு வாகனத்தில் வந்த அறிவு
எல்லை கடந்து இப்போது
எல்லோருக்கும் பயன்பட
இணையத்தில் வருகிறது!

உரிமைத் தொகை வேண்டாமல்
கலைஞர் நூல்களை நாட்டுடைமை ஆக்கி.
அறிவைப் பொதுவுடைமை ஆக்கி இருக்கிறார்!
நாட்டுடைமையான
முத்தமிழ் அறிஞரின் படைப்புகள்
உலகில் எந்த நாட்டிலிருந்தும்
எந்த நேரத்திலும் படிக்க
இணையத்தில் கிடைக்கப் போகின்றன..

அறிவு என்றாலே செயற்கைதான்
ஆனால்
செயற்கை நுண்ணறிவு
தனிப்பட்ட மனிதனை மிஞ்சிய
அறிவின் கருவூலம்!
ஏனெனில்
இலட்சக் கணக்கான ஆண்டுகளாக
வளர்ந்து வரும் மரபு அணுக்களைக் கொண்ட
கோடிக்கணக்கான மக்களின்
மூளைகளின் சிந்தனை அது.

பார்க்கவும் கேட்கவும்
புரிந்து கொள்ளவும்
பதில் சொல்லவும்
சொன்னதைச் செய்யவுமாக
இணைய உலகில் நிறைய செயலிகள்!

எப்போதும் தன்னைப்
புதுப்பித்துக் கொள்ள
எல்லாவற்றிலிருந்தும்
கற்றுக்கொள்கிறது.

அதற்கென்று தனியாக
எதுவும் தெரியாது.
ஆனால் என்ன கேட்டாலும்
யாரை விடவும் கூடுதலாக
அதற்குப் பதில் தெரிகிறது!

உரையாடுகிறது.
சொன்னால் கவிதை கட்டுரை
எழுதுகிறது.
மொழிபெயர்க்கிறது.

ஆனால் அதற்கென்று தனியாகத்
தாய்மொழி ஏதும் இல்லை
ஆனாலும்
கேட்கும் மொழியில்
அரசியலோ ஆதிக்கமோ இல்லாமல்
பதில் சொல்லத் தெரிந்திருக்கிறது.
சீனாவில் பல மருத்துவ மனைகளில்
இப்போதே பணிபுரிகிறார்கள்
இயந்திர மனிதர்கள்!

சீன மொழியின்
வட்டார வழக்கையும் புரிந்து
நோயாளிகளுக்குப் பதில்
சொல்கின்றனவாம்
ரோபோக்கள்!

குழந்தையை ரோபோவிடம் விட்டுவிட்டு
அலுவலகம் செல்லப் போகிற
காலம் வந்துகொண்டிருக்கிறது!
இனிவரும் காலங்களின்
மக்கள்தொகைக் கணக்கெடுப்பில்
இயந்திர மனிதர்களுக்கும்
இடம் இருக்கும் போல!

இது அறிவின் விடுதலைக் காலம்
உயிரினங்களில்
மனிதனை உயர்த்தி வைத்திருப்பது
அறிவு.
அறிவின் பரிணாமத்தில்
நெருப்பு, மின்சாரம், இணையம் கடந்து
இப்போது செயற்கை நுண்ணறிவு!

தமிழ்ப் பாடப் புத்தகத்திலும்
செயற்கை நுண்ணறிவுக்கு
இடம் கிடைத்திருக்கிறது தமிழ் நாட்டில் !

இப்போது உலகை ஆள்வது
அதிகாரம் இல்லை
அறிவு!
வரும் காலத்தில் இனி ஆளப் போவது
செயற்கை நுண்ணறிவு!

அறிவு, பாதுகாக்கும்;
பகைவர்களும் அழிக்க முடியாத
அரணாகும்.
அதனால் அறிவுடையார் ஆவது
அறிவார் என்று
திருவள்ளுவர் சொல்கிறார்!

இதோ முதல்வரை வரவேற்க
மைக்ரோ சாப்ட்
தலைமையகத்திலும் தமிழ்!

கூகுள் நிறுவன
செயற்கை நுண்ணறிவு ஆய்வகங்கள்
தமிழ்நாட்டில்!

தமிழ்நாடு முதலமைச்சர்
நம்பிக்கை தந்திருக்கிறார்.

இனி
செயற்கை நுண்ணறிவு உலகையும்
தமிழ் வெல்லட்டும்!

அன்புடன்
ம.ரா.



-நன்றி
‘கணையாழி’
செப்டம்பர் - 2024